ජාතික අධ්‍යාපන ආයතනය
தேசிய கல்வி நிறுவகம்
NATIONAL INSTITUTE OF EDUCATION
තැ.පෙ. 21, හයිලෙවල් පාර, මහරගම
த.பெ. 21, ஹைலெவல் வீதி, மகரகம
P.O. Box 21, High Level Road, Maharagama, Sri Lanka

*අපේ යොමුව :*
*எமது கோவை:*
*Our Reference :*

*ඔබේ යොමුව :*
*தங்கள் கோவை:*
*Your Reference:*

දිනය
திகதி
Date ............

கல்விமுதுதத்துவமாணி/கல்விமுதுமாணி/கல்வி முகாமைத்துவ விஞ்ஞானமாணி/
கல்வி முகாமைத்துவ முதுமாணி/ கல்விமாணி

பட்டம் பெறுபவர்களுக்கு

## பட்டமளிப்பு விழா - 2022

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழா - 2022 எதிர்வரும் டிசெம்பர் மாதம் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்திற்கு அமைய நீங்கள் செயற்பட கடமைப்பட்டுள்ளீர்கள் என்பதுடன், உங்களுக்குரிய பட்டமளிப்பு நிகழ்வு 2022.12. ........... முற்பகல்/ பிற்பகல் அமர்வில் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் குறித்த நேரத்திற்கு சமுகமளித்தல் அவசியமாகும்.

பட்டமளிப்பு விழாவில் உங்கள் வருகையை உறுதிப்படுத்துவதற்காக இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூரணப்படுத்தி பணிப்பாளர், ஆசிரியர் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம் மகரகம என்ற முகவரிக்கு 2022.டிசெம்பர். 05ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் கற்கைநெறி மற்றும் பிரதேச மத்திய நிலையம் என்பவற்றை குறிப்பிடவும்.

பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள எதிர்பார்த்திருக்கும் ஒவ்வொரு பட்டதாரியிடமிருந்தும் ரூபா 6,500/= பணம் அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்பவர்கள் உரிய பணத்தை தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 607628 இற்கு எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்புச் செய்து அதற்கான பற்றுச்சீட்டை வருகையை உறுதிப்படுத்தும் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பணம் செலுத்தும் பற்றுச்சீட்டில் ஏனையவை (Other) என்ற இடத்திற்கு (Convocation) என்று குறிப்பிடவும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்காக அலுவலக நேரத்தில் அழைக்கவும்

| | |
|---|---|
| திருமதி.எம்.எம்.எப்.நாதியா | 0117601755 |
| திரு.டப்ளியூ.சூரியகுமார் | 0117601745 |

விஷாரத சுதத் சமரசிங்க
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General (011) 7601620
කාර්යාලය / அலுவலகம் / Office (011) 7601601
ෆැක්ස් / பெக்ஸ் / Fax (011) 7601800 (011) 7601700
I.D.D. Code +94-1
වෙබ් අඩවිය / இணையதளம் / Website www.nie.lk
ඊ-මේල් / ஈ-மெயில் / E-mail info@nie.lk nie.lk@hotmail.com

# தேசிய கல்வி நிறுவகம்
# பட்டமளிப்பு விழா - 2022
# அறிவுறுத்தல் பத்திரம்

**01. பட்டமளிப்பு விழா**

திகதி : 2022 டிசெம்பர் 27,28
இடம் : பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் (BMICH)
நேரம் : முதலாம் அமர்வு : காலை 09.00
இரண்டாம் அமர்வு : பி.ப. 01.00

**02. உடை**

ஆண் : தேசிய உடை அல்லது மேற்கத்தேய உடை (காற்சட்டை, முழுக்கை சேட், டை, கோட், சப்பாத்து) கட்டாயமானது.
பெண் : பட்டமளிப்பு விழாவிற்குப் பொருத்தமான சேலை அணிந்திருக்க வேண்டும்.

**03. பங்குபற்றுனருக்கான அறிவுறுத்தல்**

* பட்டமளிப்பு விழாவன்று உங்களுடன் ஒருவர் மட்டுமே வைபவத்தில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதுடன் உங்களுடன் சமூகமளிப்பவர் விழாவிற்கு பொருத்தமான உடை அணிந்திருக்க வேண்டும்.
* எக்காரணம் கொண்டும் ஒருவரைத் தவிர வேறு நபர்களை மண்டபத்தினுள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை கவனத்திற் கொள்ளவும்.
* தங்களுக்குத் தரப்பட்ட அதே இலக்கம் உங்களுடன் வருபவர்களுக்கும் வழங்கப்படும். எனவே வேறு ஒருவரின் அழைப்பிதழை பயன்படுத்தி மண்டபத்தில் பிரவேசிக்க முடியாது. (12 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்)
* உணவுப்பொதி, குடை, புகைப்படக் கருவி என்பன விழா மண்டபத்தினுள் கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது. கையடக்கத் தொலைபேசி பாவனை விழா மண்டபத்தினுள் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.
* நீங்கள் அல்லது உங்களுடன் வருபவர் மண்டபத்தினுள் புகைப்படம் எடுப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

**04. ஊர்வலத்தில் கலந்து கொள்ளல்**

* பட்டமளிப்பு விழா மண்டபத்திற்கு நீங்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவீர்கள்.
* மண்டபத்தின் நுழைவதற்கு 45 நிமிடங்களுக்கு முன்னர் ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கு உங்களுக்குரிய பட்டமேலங்கியை அணிந்து வரிசையில் நிற்க வேண்டும். (BMICH பிரவேச வாசலில்)
* ஊர்வலத்தில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கத்தின் அடிப்படையில் நிற்கவேண்டும்.
* பட்டமேலங்கி அணியாதவர்கள் பட்டமளிப்பு ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
* ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்கள் பட்டமளிப்பு விழா ஒழுங்கமைப்புக் குழுவினரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.
* மிகவும் அமைதியாகவும் பணிவாகவும் ஊர்வலமாக விழா மண்டபத்தினுள் பிரவேசித்து தமக்குரிய ஆசனத்தில் அமரவேண்டும்.

**05. பட்ட மேலங்கி மற்றும் பதக்கம் வழங்கல்**

* பட்ட மேலங்கியை பெற்றுக் கொள்ளும் முறை பின்வருமாறு அமையும்.

| திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 2022.12.26 | காலை 6.00 தொடக்கம் இரவு 11.00 | தேசிய கல்வி நிறுவக கட்டிட இலக்கம் 05 இரண்டாம் மாடியில் அறை இலக்கம் T 314, T 315 T316, T 317 |
| 2022.12.27 | காலை 6.00 தொடக்கம் இரவு 11.00 | |
| 2022.12.28 | காலை 6.00 தொடக்கம் நண்பகல் 12.00 | |

* பட்டமேலங்கி பட்டம் பெறுபவர்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்படும். எக்காரணம் கொண்டும் பட்டதாரியல்லாத வேறு நபர்களுக்கு விநியோகிக்கப்பட மாட்டாது. என்பதை கவனத்திற்கு கொள்க.

* பட்ட மேலங்கியினை பெற்றுக் கொள்ள வருகை தரும் போது தேசிய அடையாள அட்டை அல்லது மாணவர் பதிவுப் புத்தகம் என்பவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்.

* பட்டமேலங்கி வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அழைப்பிதழ், தேநீர் உபசார அட்டை என்பவற்றைப் பெற்றுக் கொள்ளவும்.

* பட்டமளிப்பு விழா நடைபெறும் மண்டபத்தில் எக்காரணம் கொண்டும் பட்டமேலங்கி வழங்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**06. பட்டமேலங்கி மற்றும் பதக்கத்தினை ஒப்படைத்தலும் பட்டச்சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளலும்**

* பட்டமேலங்கியினையும் பதக்கத்தையும் பட்டதாரியே மீள ஒப்படைத்தல் வேண்டும்.

* பட்ட மேலங்கியை மீள ஒப்படைக்கும் முறை பின்வருமாறு அமையும்.

| திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 2022.12.27 | பி.ப 1.00 தொடக்கம் இரவு 11.00 | தேசிய கல்வி நிறுவக கட்டிட இலக்கம் 05 இரண்டாம் மாடியில் அறை இலக்கம் T 314, T 315 T316, T 317 |
| 2022.12.28 | காலை 6.00 தொடக்கம் இரவு 11.00 | |
| 2022.12.29 | காலை 9.00 தொடக்கம் பி.ப 4.00 | |
| 2022.12.30 | மு.ப 9.00 தொடக்கம் பி.ப 4.00 | |

* பட்டமேலங்கியினை ஒப்படைத்த பின்னர் வழங்கப்படும் பற்றுச்சீட்டினை தேசிய கல்வி நிறுவக பரீட்சைகள் பகுதியில் (கட்டிட இலக்கம் -08) ஒப்படைத்து உங்களுக்குரிய பட்டச்சான்றிதழினைப் பெற்றுக் கொள்ள முடியும். பற்றுச்சீட்டின்றி பட்டச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

* 2022 டிசெம்பர் 30ஆம் திகதிக்குப் பின்னர் ஒப்படைக்கப்படும் பட்டமேலங்கிக்கு நாளொன்றுக்கு ரூபா 500 வீதம் தண்டப்பணம் அறவிடப்படும்.

* பட்டமேலங்கி தொலைந்து போனால் தேசிய கல்வி நிறுவகத்தால் பட்டமேலங்கியின் பெறுமதிக்கான கட்டணம் அறவிடப்படும்.

**07. புகைப்படம் எடுத்தல்**

* புகைப்படம் எடுத்தல் தொடர்பான செயற்பாடுகள் உங்களது தனிப்பட்ட விடயமாகும். புகைப்படம் எடுப்பதற்கு தனியார் நிறுவனம் ஒன்றின் சேவையைப் பெற்றுத்தர தேசிய கல்வி நிறுவகம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.
* தங்களுக்கு தேவையான புகைப்படங்களுக்கான கட்டணத்தை தனியார் நிறுவனத்திற்கு செலுத்துதல் வேண்டும்.
* பட்டமளிப்பு விழாவில் உங்களுக்கு தேவையான புகைப்படத்தினை பெற்றுக் கொள்ள முந்திய தினம் அதாவது 2022.12.26 மற்றும் 27 ஆம் திகதிகளில் காலை 8.00 முதல் பி.ப 4.00 மணி வரை தேசிய கல்வி நிறுவக கட்ட இலக்க 05 இன் தரைத்தளத்தில் தங்களுக்குத் தேவையான கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
* கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினை பட்டமளிப்பு விழா தினதன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் தகுந்த நபர்களுக்கு வழங்கி சேவையினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.
* புகைப்படங்கள் தொடர்பான சகல விசாரணைகளும் குறித்த தனியார் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். புகைப்படம் தொடர்பான எவ்வித பொறுப்பினையும் தேசிய கல்வி நிறுவகம் ஏற்காது.

**08. தேநீர் உபசாரம்**

* பட்டமளிப்பு விழா நடைபெற்ற பின்னர் இடம்பெறும் தேநீர் உபசாரத்தில் உங்களுக்கும் உங்களுடன் வருகை தரும் ஒருவருக்கும் கலந்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான அட்டைகள் பட்டமேலங்கியினைப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தரும்போது பெற்றுக் கொள்ளவும்.
* தேநீர் உபசாரத்திற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே தேநீர் பெற்றுக் கொள்ளமுடியும். இதற்காக கட்டணம் எதுவும் வசூலிக்கப்படமாட்டாது.

**09. பொது அறிவுறுத்தல்கள்**

* மண்டபப் படிகளில் கூட்டாக அமர்தல், நித்திரை செய்தல், உணவு உண்ணல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன. அத்துடன் எமது பாதுகாப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்றும்படி உங்களுடன் வருகை தருபவர்களுக்கு அறிவுறுத்தவும்.
* உங்களது தனிப்பட்ட வாகனங்களை BMICH வளாகத்தினுள் நிறுத்தி வைத்துக் கொள்ளும் பொறுப்பு உங்களைச் சார்ந்ததாகும்.
* தேசிய கல்வி நிறுவகத்தின் கௌரவத்திற்கு பங்கம் விளைவிக்காத வகையில் நடந்து கொண்டு எமது அதிகாரிகளினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பட்டமளிப்பு விழாவினைச் சிறப்பாக நடாத்துவதற்கு உங்களது ஒத்துழைப்பை எதிர்ப்பார்க்கின்றோம்.
* தவிர்க்க முடியாத காரணத்தினால் பட்டமளிப்பு விழா தினங்களில் ஏதுவும் மாற்றங்கள் ஏற்படின் அச்சு ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகம் மூலம் அறிவிக்கப்படும். எழுத்துமூலம் உங்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமாக கவனத்துடன் இருக்கவும்.
* இப்பட்டமளிப்பு விழா Channel NIE YouTube அலைவரிசை மூலம் நேரடியாக ஒளிபரப்பட நடவடிக்கை எடுத்துள்ளதால் உங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கு வீட்டிலிருந்து பார்வையிட முடியும்.